பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 19 (02 - 05 - 1991) வியாழக்கிழமை ஓசை: 73

## வெளி. பத்திரிகையாளர் யாழ். வரத் தடை

(வவுனியா)

மேதினவைபவத்தில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பிரதிநிதகளும் பத்திரிகையாளர்களும் திருப்பி அனுப்பப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இடம் பெறற மேதின வைபவங்களைப் பார்வையிடவும், பேரணியில் கலந்து கொள்ளவும் வந்த எட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களும் யாழ்ப்பாணம் வரும் வழியில்

(4ஆம் பக்கம் பார்க்க)




நல்லூரில் நேற்று நடந்த மேதினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்ணம் யோகி, மக்கள் முன்னணியின் பிரமுகர் பாலகுமாரன் ஆகியோர் உரையாற்றுவதை முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் படங்களிலும் நான்காம் படத்தில் பேரணியில் கலந்து கொண்ட ஊர்தி ஒன்றையும் காணலாம்.

# யாழ். குடாநாடு காணாத மாபெரும் மேதின பேரணி

வரலாறு காணாத மாபெரும் மேதினப் பேரணி நேற்று யாழ். குடாநாட்டில் நடைபெற்றது. நேற்றுக்காலை மருதனாமடத்தில் ஆரம்பித்தஇப்பேரணியில் விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்று இலட்சக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர். ஆறுமைலுக்கும் அதிகமான நீளம் கொண்ட இப்பேரணி ஓரிடத்தைக் கடந்து செல்ல நான்கு மணித்தியாலத்திற்கு மேல் சென்றது. இப்பேரணியில் நூற்றுக்கணக்கான ஊர்திகளும் இடம்பெற்றன. பேரணியைத் தொடர்ந்து கூட்டமும் நடைபெற்றது.

வரலாற்றில் என்றும் காணாத இந்த எழுச்சிப் பேரணி நேற்றுக்காலை ஒன்பது முப்பது மணியளவில் மருதனாமடம் சந்தியில் இருந்து ஆரம்பமாகியது. விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு முன்வரிசையில் அணிவகுத்து வர அதனைத் தொடர்ந்து வானதிரும் கோஷங்களை முழங்கும் ஒலிபெருக்கி வாகனங்களும், தொடர்ந்து வெண்ணிற சீருடை அணிந்த சங்கங்களின் தொண்டர்களும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் அணிவகுத்து வந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### இரு தினங்களில் மட்டக்களப்பில் ஐவர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரவெட்டிக்கும், மகிழவெட்டுவானுக்குமிடையில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் தீசன் (ப. யோகராசா நெடியவெட்

(4ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திர மனிதர்களாக

## வீதிவழியேநாம் அணிவகுப்பது தவிர்க்க முடியாதது - மகேந்திரராசா

(நமது நிருபர்)

தமிழீழத் தேசத்திற்கு இன்று தேவைப்படுவதெல்லாம் விடுதலையும், சுதந்திரமும் தான். மரணத்தின் வாசலில் நின்று கொண்டு, மரணம் எப்பொழுதும் வரலாம் என்பதை ஏற்றுக்கொண்டு, போராடும் தமிழீழ இளைஞர்களே இன்று தமிழீழ அன்னைக்குத் தேவைப் படுகிறார்கள் என நேற்றைய மேதினப் பேரணியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா தமிழீழமக்களுக்கு அறைகூவல் விடுததார்.

நல்லூரில் இடம் பெற்ற பேரணியில் உரையாற்றிய திரு. மகேந்திரராசாவின் பேச்சின் முழு விபரமும் வருமாறு:

அன்பான தமிழீழ மக்களே!

இன்று மேதினம். உலகத் தொழிலாளர்களின் திருவிழா. தொழிலாள வர்க்கம் தாம் பெற்ற முதல் வெற்றியைக் கொண்டாடும் இந்நாளில் நாம் இங்கு கூடி உள்ளோம்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள்

தமிழீழ ஆசிரியர் சமூகம் தனது பணியை செவ்வனே ஆற்றி வந்தமையால்தான் பல்கலைக்கழகங்களுக்கு பெருமளவு மாணவர்கள் புக முடிந்தது. அதனாலேயே தரப்படுத்தல் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதுவே தமிழீழப் போராட்டம் வீறு கொள்ளக் காரணமாகஅமைந்தது எனக் கருதுகிறேன் எனக் கூறினார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

உலகின் மனச்சாட்சிக்கு

## எமது மக்களின குரல் மே தின நாளில் எட்டட்டும் -பாலகுமாரன்

(யாழ்ப்பாணம்)

சொந்த அடையாளங்களைக் கைவிட்டுப் பொது அடையாளங்களைக் காப்பாற்ற அனைவரும் முன்வர வேண்டும். மனப்பூர்வமாகப் போராட்டத்தில் பங்குபற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. பாலகுமாரன். நேற்றைய மேதினப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு தமிழ் மக்கள் பழுகாமத்தில் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோக் குழுவினரும் இணைந்து ஏழு தமிழப்பொது மக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் மட்டக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இருநாள் குண்டுவீச்சில் ஒருவர்பலி; மூவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மேதினமாகியநேற்றும் நேற்று முன்தினமும் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் விமானத்தாக்குதலை மேற்கொண்டதில் பொதுமகன் ஒருவர் பலியானார். மூவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் 4 படை பலி ஆயுதங்களும் மீட்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் நன்கு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 10-30 மணியளவில் தம்பலகாமத்தில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைப்பதற்காக கடவானைகடற்படைமுகாம்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### குருமன் நோய்

மிளகாய்ச் செடியைத் தாக்கும் குருமன் நோய்க்கு நீமியாவுடன் சலவைப்பவுடர் கலந்து தெளிக்கமை மேற்பலன். ஏனையபயிர்களுக்கும் ஏற்றது. பாவனை முறைக்குத் தொடர்பு கொள்க மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/2449)

### சிரமதானம் மூலம் குளம் திருத்தும் பணி

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை முன்னிட்டு செம்மணிக் குளத்தை ஆழமாக்கும் பணி நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. நாயன்மார்கட்டு கிராமிய உற்பத்திக் குழு, அரியாலை மத்தி சிற்றூரவை, நாயன்மார்கட்டு சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம் என்பன சிரமதானம் மூலம் இப்பணியை மேற்கொண்டன.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் தமிழர்கள். இந்தத் தேசத்தைஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து, சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடுகின்றோம் நாம், இனத்தால், மொழியால், கலாசார வாழ்வால் வரலாற்றால் தனித்துவமானவர்கள். நாம், எமது சொந்த நிலத்தில் தலை நிமிர்ந்து வாழ ஆசை கொண்டுள்ளோம்.

போராடிப் போராடி உறுதி பெற்ற எங்களின் கரங்களில் ஒருநாள், இந்தத் தேசத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கும். சுதந்திர மனிதர்களாக, விடுதலை அடைந்த எங்கள் வீதிகளின் வழியே நாங்கள் அணிவகுப்போம். இது தவிர்க்க முடியாதது. ஏனெனில், எங்கள் இதயங்களில் விதைக்கப்பட்ட விடுதலை உணர்வானது வளர்ந்து விருட்சமாகி விட்டது.

கடந்த காலங்களில் எங்கள் தேசத்தின் மீது சுமத்தப்பட்ட சுமைகள் கடுமையானவை தாங்க முடியாத துயரம் நிறைந்தவை. எமது வீதிகளிலும் வீடுகளிலும் குண்டுகள் வீசப்பட்டன. தொழிலுக்கோ தொழிலகங்களுக்கோ செல்ல முடியாத நிலை எமது தேசம் பொருளாதாரமுற்றுகையிடப்பட்டது. நாம் நெருக்கப்பட்டோம். எமது குரல் வளை நெரிக்கப்பட்டது.

கடலெங்கும் திரிந்த கடற்படையினர் - தொழிலுக்குச் செல்லும் எமது மீனவர்களை கடலுக்கு இரையாக்கினார்கள். வயலுக்குச் சென்ற பல தமிழர்கள் உரமாகிப் போய் இருக்கிறார்கள். எல்லாத் தொழிலுக்குமே அடிப்படையான எரிபொருளும், மின்சாரமும் தடைசெய்யப்பட்டது. விவசாய உற்பத்திக்குத் தேவையான அடிப்படை மூலப் பொருட்களும் தடை செய்யப்பட்டன. நாம் அழிந்து விடுவோமோ அல்லது தப்பி பிழைத்து விடுவோமா என்ற கேள்வி உலகில் எழுந்தது.

எமமிடமிருந்தது எல்லாம் சுதந்திர உணர்வும் - மனவைராக்கியமும் மட்டும்தான். தம் மீது விதிக்கப்பட்ட எல்லாவற்றுக்குமாகத் தமிழர்கள் போராடினார்கள். இராணுவ முகாம்களின் வாசலிலும் - காடுகளிலும், எல்லைகளிலும் - ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகப் போராடினார்கள், வயல்களிலும், கடலிலும் வாழ்வதற்காகப் போராடினார்கள். இப்படி எங்கும் பேராட்டம் தொடர்ந்தது. தமிழீழத் தேசத்தின் மீது இடப்பட்ட பொருளாதார அழுத்தத்திற்கு உள்ளாகவும், தமிழீழத் தேசத்தவர்கள் தலை நிமிர்ந்தார்கள். தமது சொந்தக் காலில் நிற்க வெளிக் கிட்டார்கள் சொந்தப்பொருளாதார வாழ்வை ஏற்படுத்த விழைந்தார்கள்.

சிங்கள அரசு எம்மீது விதித்த பொருளாதாரத் தடை எம்மை சுயமாகவும்- தனித்துவமாகவும் வாழ வழி செய்தது. இந்நடவடிக்கை தமிழீழத் தொழிலாளர்களை விழிக்கச் செய்தது.

இங்கு கடலெனத் திரண்டிருக்கும் மக்களின் - தொழிலாளர்களின் சக்தி உலகத்திற்கு பலவற்றைப் பிரகடனப்படுத்துகிறது நாங்கள் சுதந்திரத்தையும் - விடுதலையையும் உயிரைவிட உயர்வாக நேசிக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது. அதே நேரம், தமிழீழத்தவர்களின் பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதையும், தெட்டத்தெளிவாகக் காட்டி நிற்கிறது. இன்று இங்கு வந்தவர்கள்- இந்த மக்களின் உணர்வுகளை பகிர்ந்து கொண்டவர்கள் இதனை உணர்ந்து கொள்வார்கள் என நான் நினைக்கின்றேன்.

அண்மையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் புலிகள் ஜனநாயக ரீதியில்- தாங்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

ஓர் இனத்தின் சுதந்திர தாகத்தையும் - அடக்குமுறைக்கு உள்ளாகி ஒடுக்கப்படும் மக்களின் இதயவுணர்வுகளையும் விளங்கிக்கொள்ள முடியாத இவர்கள், ஜனநாயகத்தைப்பற்றி போதனை செய்வது விசித்திரமானது. இந்திய ஜனநாயகத்தைப் பற்றியும், தேர்தல் தாற்பரியங்களைப் பற்றியும் - நாங்கள் நன்றாகவே அறிந்துள்ளோம்.

இந்திய அரசு இந்த மண்ணிலும் ஒரு தேர்தலை நடத்திக் காட்டியிருந்தது. அந்தத் தேர்தல், இந்திய ஜனநாயக முறை எப்படிப்பட்டதென எம் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இந்தியத் தூதுவரை நாமும் சில கேள்விகள் கேட்கலாம். இந்தியாவின் இன்றைய பிரதமர் எத்தகைய ஜனநாயக வழியில் ஆட்சிக்கு வந்தார்?

இந்தியாவின் பெருந்தொகையான மக்கள் இவருக்கும்- இவரின் இலட்சியத்திற்கும் வாக்களிததாலா? என்று கேட்கலாம். தமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு எத்தகைய வழிமுறைகளில் கலைக்கப்பட்டது? என்பதையும் கேட்கலாம். இவற்றிற்கு அவரிடம் பதில் இருக்காது.

இந்தியத் தூதுவருக்கு தமிழ் மக்களின் போராட்ட சக்தி யார் என்பதை அறியும் ஆவலிருந்தால் அவர் இன்று இங்கு வந்திருக்கலாம். உணர்வால் இதயத்தில் ஊறியிருக்கும் விடுதலைப்பற்றால் அழிவையும், ஆபத்தையும் எதிர்பார்த்தபடி அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனவன்மையுடன் இங்கு வந்திருக்கும் இந்த மக்கள் கூட்டத்தை பார்த்திருந்தால் அவருக்கு நிலவும் சந்தேகம் நீங்கியிருக்கும்.

இந்திய அரசு இராணுவ ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ எமது தேசத்தில் தலையீடு செய்வதை நாம் விரும்பவில்லை. இந்திய அரசினர் ராஜதந்திர ரீதியில் தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கும் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம் தமிழீழ மககளின் நலனை, நல்வாழ்வை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எந்தத் தீர்வைப் பற்றியும் பேசுவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

நாம் இந்தவருட ஆரம்பத்தில் சமாதானத் தீர்வுக்காக பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்குரியசூழ் நிலையைஉருவாக்கினோம் அதன் விளைவாக யுத்தநிறுத்தம் ஒன்றையும் கடைப்பிடித்தோம். மாங்குளத்திலும், கோட்டையிலும் இராணுவ வீழ்ச்சியடைந்திருந்த சிறிலங்கா அரசு அந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு வரத் தயாராக இல்லை.

இராணுவ மேலாதிக்கநிலையிலிருந்து கொண்டு பேச்சுக்களை நடத்தலாமென சிறிலங்கா அரசு எண்ணுகிறது. இதனால் எம்மீது புதிய அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் செலுத்தலாமென்று பிரேமதாசா அரசு தப்புக் கணக்குப் போடுகிறது.

சிறிலங்கா அரசின் இந்த இராணுவவாத நிலையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச சமுதாயமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று சிறிலங்கா அரசிற்கு தமிழர் மீதான யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது பொருளாதார அழிவின் விளிம்பில் நிற்கும் சிறிலங்கா அரசு இந்நிதியை சர்வதேச நாடுகளிலிருந்தே பெறுகின்றது. நாட்டின் அபிவிருத்தி என்ற போர்வையில் பெறப்படும் இந்த நிதி தமிழினத்தின் அழிவிற்கே பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் அன்னியக் கடனுதவிக்காக பேச்சுவார்த்தை என்றும் சமாதானத் தீர்வென்றும், சிறிலங்கா அரசு வேஷம் போடுகிறது. சிறிலங்கா அரசால் நாட்டில்

(4ஆம் பக்கம் பார்க்க)


## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

### 1. கணக்கு லிகிதர்

வயது:- 25 - 45

தகைமை:- கணக்குத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

### 2. நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை:-நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(B-2457)





## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

### கேள்விப் பத்திர அறிவித்தல்

### 1000 பதக்கங்கள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ''யாழ்ப்பாணப் பல்கலைக்கழக'' இலச்சினை பொறிக்கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குத் தகட்டில் (Stainless Steel) 5 சென்ரி மீற்றர் விட்டமும் 2 மில்லி மீற்றர் விளிம்புமுடைய 1000 பதக்கங்கள் வழங்குவகற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன தகட்டின் கனம் 18 முதல் 20 கேஜ் இருத்தல் வேண்டும். பதக்கத்தின் மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்பெயருக்கு மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக ரூபா 1000 செலுத்திய பற்றுச் சீட்டுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிணைப்பணம் செலுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

1. கேள்விப்பத்திரதாரர் பெயர், முகவரி.
2. வியாபார அலுவலக முகவரி
3. தொழில் அனுபவம்

தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரதாரர் பதக்கங்களை ஒரு மாதத்திற்குள் வழங்க வேண்டும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப்பத்திர தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில்' பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்'' எனக் குறிக்சப்பட்டு நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15. 05. 91 காலை 10 00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 15. 05. 91 முற்பகல் 10. 30 மணிக்கு திறக்கப்படும்.

– பதிவாளர்

(B/2453)



## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

(1) வயது எல்லை: 18 வயது முதல் 30 வயது வரை
(2) உயரம்: 5 அடி 6 அங்குலம்
(3) கல்வித் தகைமை: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரண தரம்) க. பொ. த. (உயர்தரம்) வரை

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழக் காவல்துறை.

(B-2456)



## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 02

1988 ஆம் ஆண்டு மன்னார் கிராட்டிக்குளத்தில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**கர்ணன்** (ஆறுமுகம் ஆனந்தநாதன் - பூநகரி)

1989ஆம் ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன் குட்டி/தரன்**

(நாகராசா ஞானகுலசிங்கம் - வல்வெட்டித்துறை)

இதே ஆண்டு வரணியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**பிக்கப்/செந்தில்**

(கனகரத்தினம் சிறிகாந்தன் - கற்குழி, சாவகச்சேரி)

ஆகியோரை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2444)

## சிந்தனைக்கு

நிகழ் காலத்தை அறிய கடந்த காலத்தை - நீ அறிந்திருக்க வேண்டும்.

—மாக்ஸிம் கோர்க்கி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 02-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05

# மீண்டும் ஒருதடவை மக்கள் உணர்த்தினர்

மீண்டும் ஒரு தடவை தமிழீழப் போராட்டத்தின் மீது தாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும், விடுதலைப்புலிகள் மீது தாம் வைத்துள்ள நம்பிக்கையையும் தமிழீழ மக்கள் நேற்று மே தினத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னால் மக்கள் சக்தியின் திரண்ட ஆதரவின் வெளிப்பாட்டை உலகிற்கு எடுத்துக்காட்ட மேதின பேரணியிலும் கூட்டத்திலும் பங்கு பற்றுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று இலட்சக்கணக்கான மக்கள் கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பேரணியிலும் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

இந்தத் தொழிலாளர்கள் தினத்தில், முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடுகள் எதுவுமின்றி யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அரச சார்பற்ற பொது நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், அமைப்புக்கள் யாவற்றையும் சேர்ந்த ஊழியர்கள் அனைவரும் ஓர் அணியின் கீழ் திரண்டு மேதினத்தில் கலந்து கொண்டனர்.

தமிழர்களின் வரலாற்றில் இவ்வாறாக பல தரப்பினரும் கலந்து கொண்ட பேரணி ஒன்றும் இதற்கு முன்னர் என்றும் இடம் பெற்றதில்லை.

பல்வேறு பொருளாதார, இராணுவ அடக்கு முறைகளுக்கு மத்தியில் இவ்வளவு பெருந்தொகையில் மக்கள் உறுதியுடன் கலந்து கொண்டமை உண்மையை ஏற்க மறுக்கும் விதண்டா வாதம் பேசும் சிறிலங்கா அரசிற்கும், இந்திய அரசிற்குமானதொரு எடுத்துக் காட்டாகும். தமிழர்கள் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பணிந்து தமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதோடு, விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும் இம் மே தினத்தில இருந்தும் அவர்கள் புரிந்து கொள்ளத் தவறின் அது தமிழ மக்களின் தவறாகாது.

இந் நிலையில் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை விடுதலைப் புலிகள் நிரூபிக்க வேண்டும் என்பதும ஏனைய தமிழ்க்குழுக்களுடன் புலிகள்பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்ற சிறிலங்கா அரசினதும் இந்தியாவினதும் கோரிக்கைகளும் கேலிக்குரியதாகும்.

மேதினத்தில் நேற்றுத்திரண்ட இலட்சக்கணக்கான மக்கள் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை உணர்த்தும் அதேவேளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கு தலையணையுடன் சென்றவர்களையும் கொழும்பில் இருந்து யாழ் நகருக்கு பஸ்ஸில் வந்து கொண்டு இருந்தவர்களையும் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தவர்களையும் பலாத்காரமாகக் கூட்டத்திற்கு ஏற்றிவந்து கூட்டத்திற்கு ஆட்சேர்த்தவர்களையும் தமிழ மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிப் பேச்சுவார்த்தை நடத்துமாறு கோரிக்கை விடுவதும் தமிழ் மக்களையே கேவலப்படுத்துவது போன்றதாகும்.

தமிழ் மக்கள் மேதினத்தின் மூலம் பாரிய நெருக்கடியின் பின்னரும் விடுதலைப் புலிகளின் தலைமையும் அவர்களின் போராட்ட வழிமுறைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளதோடு தமது உரிமைக்கு தமிழீழம் ஒன்றே தீர்வு என்பதையும் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இதனை தமிழ் மக்கள் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் புரிந்து கொள்வது அவசியம். இதைவிடுத்து கடந்த காலத்தைப் போன்று தமது இலாப நட்டக் கணக்குகளைப் பார்த்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியையோ அன்றி தமிழர் பிரச்சினையில் தலையிடும் முயற்சியையோ மேற்கொள்வதால் எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. அதனைத் தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதோ அல்லது அதற்கு அடிபணியப் போவதோ இல்லை என்பதே இந்த மேதினத்தின் முடிவாகும்.

# தொழிலாளர் கல்வி

## சரோஜா சிவச்சந்திரன் M. A.

தொழிலாளர்களது உரிமைகள் உயிர் பெற்ற மேதினத்தன்று யாழ். பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கல்வி நெறி ஆரம்பிக்கப்படுவது ஓர் முக்கிய நிகழ்ச்சியே. எமது பிராந்தியத்தில் தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகள் என்ன அடிப்படை உரிமைகளையே இழந்து வாழ்வின் அடிமட்டத்திற்கு தள்ளப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிங்கள மொழிச்சட்டத்தினால் தொழிலிழந்த தொழிலாளர்கள், அரசின் பொருளாதார நெருக்கடிகளினால் வேலை இழந்த தொழிலாளர்கள் கடற் பிராந்தியத்தில் சுதந்திரமாக தொழில் புரிய முடியாத தொழிலாளர்கள், விவசாய நடவடிக்கைகள் இன்மையினால் பாதிப்புற்ற தொழிலாளர்கள் ஊதியத்தினால் சுரண்டலினால் அடிமையாக்கப்பட்ட பெண்கள் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இந் நிலையிழந்து மீட்சிபெற தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காககுரல்கொடுக்கும் அதே நேரத்தில் ஒழுங்கான தொழிலாளர் கல்வியும் அவசியமாகும்.

தொழிலாளர் கல்வியானது முதியோர் கல்வியின் ஓர் பகுதியாக விளங்கிய போதும் அதன் தத்துவங்கள்காலாகாலம்மாறுபடும போக்கைக் கொண்டது. தொழிலாளர் கல்வி தொழிலாளர் அறிவை வளர்தது. அவனை சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டு நிலைகளுக்குகொண்டுசெல்வதோடு அவர்களது உரிமைகளையும் பெற வாய்ப்பளிக்கின்றது. இதன் மூலம் தான் பங்குபற்றும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை அறிந்து சிறந்த தலைமையினைப் பெற்று தொழில் மேம்பாட்டிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பங்குபற்ற முடியும். இதனால் தொழில உற்பத்தி பெருக்கம் அடைவதுடன் உற்பத்திதிறனிலும் அதிகரிப்பு ஏற்பட்டு தொழிலாளர் தொழில் கொடுப்போரது உறவு சீரடைகிறது. தொழிலாளர் கல்வி சிறந்த ஜனநாயக மதிப்பினை மேம்படுத்துவதனால் தொழிலாளர் மத்தியில் நாட்டின் வளர்சசி முக்கிய இடம் பெறுகின்றது. தொழிற் சங்கதலைவர்களுக்கு அளிக்கப்படும் தொழிலாளர் கல்வி பயிற்சி மூலம் நாட்டின் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை அவர்கள் அறிய வழி பிறக்கின்றது. ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு இவ்வாறான கல்வி அளிப்பதில அதிகசிரமம் இல்லாத போதிலும் ஒழுங்கு படுத்தப்படாத விவசாய, கூலி தொழிலாளர்கள், பெண்கள் போன்றோருக்கு நிறுவன ரீதியாக இவ்வாறான கல்வி அளிப்பதில் பல சிரமங்கள் உண்டு ஆயினும் தொழிலாளர் கல்வி இவை யாவற்றுக்கும் அப்பால் சகலரையும் ஒருமுகமாக ஒன்றிணைத்துபயிற்சி அளிப்பதில் வெற்றி கண்டுள்ளது.

### தொழிலாளர் கல்வி-யாருக்கு?

தொழிலாளர் கல்வியினைப் பெறத் தகுதி வாய்ந்தவர்களாக பின்வரும் தொகுதியினர் இனங்காணப்பட்டுள்ளனர்.

1) தொழிற்சங்கவாதிகள்- ஒழுங்குபடுத்தப்பட்ட துறை சார்ந்தவர்களுக்கு தொழிலாளர்கல்வியில் முக்கியம்அளிக்கப்படுகின்றது.

2) ஒழுங்கு படுத்தப்படாத துறைசார் தொழிலாளர்கள் குறிப்பாக கட்டடத் தொழிலாளர்கள், மீனவர், கிராமிய துறைசார் தொழிலாளர்கள் -இவர்களே பலவழிகளிலும் சுரண்டப்படுபவர்களாக உள்ளனர். இவர்களுககு தொழிலாளர் கல்வி அளிபபதன் மூலம் தமது உரிமைகளை உணர்த்த முடியும்.

(3) விவசாயத் தொழிலாளர்கள் - இன்று அதிகளவில் குறைந்தபட்ச ஊதியத்தின் வரம்பில் சுரண்டப்படும் தொழிலாளர்கள்.

(4) தொழிற்சங்கத் தலைவர்கள் - இவர்களுக்கு சிறப்பான முக்கியத்துவம் தொழிலாளர் கல்வி திட்டங்களில் அளிக்கப்படுதல் அவசியம்.

காரணம் - இவர்கள் தத்தமது சங்கங்களில் தொழிற்சங்க, பயிற்சிகளை நடத்த இக்கல்வி உதவும்.

(5) நாட்டின் இளம் யுவதிகள், இளைஞர்கள் போன்றோரும் தொழிலாளர் பயிற்சியில் இடம் பெறத்தக்க அடுத்த முக்கிய வகுப்பினராகும்.

பலவகைத் தொழிலாளர்களை ஒருமுகப் படுத்தும் போது தொழிலாளர் கல்வி திட்டங்கள் வகுப்பதில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. எமது பிராந்தியத்தில் ஒழுங்கு படுத்தப்படாத பல தொழிற்சங்கங்கள் உள மற்றும் பல தொழிற் சங்கங்கள் சிங்கள தலைமையினை இன்றும் ஏற்று செயற்படுகின்றன. தொழிலாளர்களில் விவசாய தொழிலாளர்கள் கிராமிய தொழிலாளர்கள் ஒழுங்கமைப்புகள் கொண்டு வரபபடாமை, தொழிலாளர்களிடையே தகுந்த கல்வி அறிவின்மை, தொழிற் திறன் பயிற்சி அளிக்கப்படாமை, ஊதியத்தில் காணப்படும் மாறுபட்ட நிலைமை, பெண் தொழிலாளர்களது ஊதிய வேறுபாடு எனபன காரணமாக தொழிலாளர் கல்வி நெறி பாடத்திட்டங்கள் தயாரிப்பதில் மிகுந்த கவனமும் சகல தொழிலாளர்களும் பயன்படக்கூடியதாகவும் அமைதல் அவசியம். அத்துடன் காலாகாலம் மாறுபடும் தொழில்நுட்ப வளர்ச்சியோடு பாடநெறிகளில் மாற்றங்கள் புகுத்தப்படுதல் வேண்டும். இன்று பெரும்பாலான நாடுகள மனித சக்தி வள மேம்பாட்டு பயிற்சி அளிப்பதில் அக்கறை காட்டுவதனால், தொழிலாளர் கல்வி நெறியினை நிறுவன ரீதியில் செயற்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுகின்றன.

1959ஆம் ஆண்டு காலப் பகுதியினை இலங்கையின் தொழிலாளர் கல்வி ஆரம்ப காலமாகக் கொள்ளலாம். தொழில் அமைச்சின் ஆலோசனைகளின் அடிப்படையில் சர்வதேச தொழிற் ஸ்தாபனத்தின் உதவியுடன் தொழிற் சங்க தலைவர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று முதலில் தொழிற் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்கலைக் கழகங்களில் தொழிலாளர் கல்வி நெறி அறிமுகமாகியது. 1971இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் தொடர் கல்வி பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சி நெறிக்கு 200 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்நெறியில் தொழிலாளர் காட்டிய ஆர்வம் மேலும் இப் பயிற்சிக்கு ஊக்கத்தினை வளர்த்தது.

1973இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடகால பயிற்சி நெறியில் 6 மாணவர்கள் திறமைச் சித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது கட்டமாக தொழிலாளர் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதாக அமைந்தது, ஆயினும் அரசாங்கமோ அன்றி முகாமையாளர்களோ தொழிலாளர்களுக்கு பட்டப் படிப்பிற்கான முழு நேர நான்கு வருட லீவு வழங்க முன்வரவில்லை. இதனால் தொழிலாளர் கல்வி நிறுவனத்தில் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு தொழிலாளர்களுக்குமுழு நேர லீவு வழங்கும் சிக்கல் தீர்க்கப்பட்டது. கொழும்பில் 1975இல் நிறுவப்பட்ட தொழிலாளர் கல்வி நிறுவனம் தொழிலாளர்களுக்குஏற்ப டிப்ளோமா பயிற்சிகளை ஆரம்பித்தது.

இன்று பல்கலைக்கழகங்களில் தொழிலாளர் கல்வி ஆரம்பிக்கப்பட்டு நான்காவது கட்டத்தின் வளர்ச்சியில் உள்ளது. இக்கட்டததில் யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வி ஆரம்பிக்கப்படுவது இதன் வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

தொழிலாளர் கல்வியினை உயர் கல்வியுடன் இணைப்பது புதிய ஓர் நிகழ்ச்சியல்ல. உலக உயர்கலவி நிறுவனங்கள் பல தொழிலாளர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள ஒக்ஸ்போட்டிலுள்ள ரஸ்கின் கல்லூரி தொழிற்சங்க தலைவர்களுக்கு வதிவிட பயிற்சியளித்து வருகிறது. இவர்கள் வருடாவருடம் 100 தொழிற் சங்கவாதிகளை எதுவித புகுமுக பரீட்சையுமின்றி தெரிவு செய்து டிப்ளோமா பட்டம் வழங்குவதோடு ஒரு வருட பயிற்சியை முடிப்பவர்கள் பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்படுகின்றனர். தொழிற் தேவைகளை மீண்டும் அபிவிருத்தி செய்யும் முறைசாராக் கல்வி மூலம் தொழிலாளர் போதிய பயிற்சியைப் பெறுவதில்லை. தொழிலாளர் கல்வியானது புதிய பரிமாணங்களோடு தொழிலாளரது பரந்த வேலைகளையும் அடிப்படையாகக் கொண்டது. இங்கு எவ்வகைத் தொழிலாளர்களும் தவிர்க்கபபடுவதில்லை. குறிப்பாக பெண்களுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதும் இக் கல்வியின் ஓர் பரிமாணமாகும். தொழில் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு பல புதிய முறைகள் தொழிலாளர் கல்வியில் அறிமுகமாகின்றன. மேலை நாடுகளில் தொழிலாளர்களுக்கு கம்பியூட்டர் பயிற்சிகள் கூட அளிக்கப்படுகின்றன.

கல்வி தொழில் சார்ந்ததாக அமைய வேண்டும். மக்கள் நாட்டின் முன்னேற்றத்தை முதலில் மதிக்க வேண்டும். இப்படியான தொழிலாளர்களே சுதந்திர போராட்டங்களில் பங்களிப்பை இலகுவில் விளங்கிக் கொண்டு முழுமையான பங்களிப்பை வழங்குவர். ஆகவே தொழிலாளர் கல்வி தமது கலாசார விழுமியங்களை நல்ல முறையில் நோக்கக் கூடிய வகையில் அமைவதால் தொழிலாளர்களுக்கு மிக அவசியமான ஓர் பயிறசியாகும்.

# கொயிலர் பதவி விலகுவார்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பெரஸ் டி கொயிலர் தாம் தொடர்ந்தும் இந்தப் பதவியில் நீடிக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் இந்தப் பதவியில் பத்து வருடகாலத்தைப் பூர்த்திசெய்யும் திரு. கொயிலரின் பதவிக்காலம் அண்மையில் முடிவடையவிருக்கிறது.

## 24 மணிநேரமும் போராடும் போராளிகள்

# ஊதியம், ஓய்வு கேட்கவில்லை ஒத்துழைப்பே கேட்கின்றார்கள்

- யோகி

(நமது நிருபர்)

மேதினம் என்பது எட்டு மணிநேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் பொழுதுபோக்கு என்ற கோரிக்கையை முன்வைத்து தொழிலாளர்கள் முதலாளிகளுக்கெதிராகமிகப்பெரும் போராட்டத்தை நடத்திய நாள். நாங்கள் வேறு விதமான போராட்டத்தில் நிற்கிறோம்.

போராளிகள் எனப்படும் உழைப்பாளிகள் எட்டு மணி நேரமல்ல இருபத்து நான்கு மணிநேரமும இந்த மண்ணில போராடிக் கொண்டிருக்கின்றனர் அவர்கள் இந்த மக்களைப் பார்த்து ஊதியம் தா என்று கேட்கவில்லை ஓய்வு கேட்கவில்லை, பொழுபோக்க நேரம் கேட்கவில்லை, எங்கள் உழைப்பிலே குளிர் காயாதீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். கூடவே வாருங்கள் நாம் கூட உழைக்க தயாராய் இருக்கிறோம். இந்த மண்ணைஎமது செந்நீரால கழுவி இந்த மண்ணின் விடுதலைக்காக அளப்பரிய தியாகத்தைச் செய்ய தயாராக இருக்கிறோம். கூடவே வாருங்கள் இதுதான் போராளிகள் உங்களிடம் கேட்கின்றார்கள் எனக் குறிப்பிட்டார் நேற்று நல்லூரில் நடந்த மேதினக் கூட்டத்தில் கலந்து பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி மேலும் அவர் பேசுகையில்; இந்த மேநாளில் நாம் விடுத்த அறைகூவல்நிறைவேறவேண்டுமானால் நீங்கள் அனைவரும் எம்முடன் கூடவே நிற்கவேண்டும் தமிழீழம் விடுதலை பெறும், அங்கு புலிக்கொடி பறக்கும். உலகில் எத்தனையோ விடுதலை இயக்கங்கள் இருக்கின்றன. ஒரு சிலர் தான் கரும்புலிகளாக இருக்கமுடியும். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கமே கரும்புலிக் கோட்டையாக விளங்குகிறது திலீபன் நீர்கூட அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தவன். அன்னை பூபதி அந்த தூக்கட்டான வேளையிலே சாகும் வரை உண்ணாவிரதமிருந்தார். இது ஒன்றை எடுத்துக் காட்டுகிறது. உணவில்லாது போகலாம், நீரில்லாது போகலாம், பெரிய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படலாம், பட்டினிகிடந்து இறந்து போனாலும் அடிபணிய மாட்டான் என்பதுதான் வரலாறு. உலகின் வரலாற்றை மாற்றி எழுதிவிட்டோம். அப்படி மாற்றி எழுதிய தலைவராக பிரபாகரன் நிற்கிறார். அவர் பின்னே பல்லாயிரமாயிரம் புலிகள் அணிவகுத்து நிற்கிறார்கள் இந்த மண் வெல்லும். இங்கு புலிக்கொடி பறக்கும் எனவும் தெரிவித்தார்.

**வெளி. பத்திரிகையாளர்**

சிறிலங்கா இராணுவத்தினரால் வவுனியாத தடைமுகாமில் வைதது திருப்பி அனுப்பப்பட்டாாகள் இவர்கள் விடுதலைபபுலிகளின் அழைப்பை ஏறறேயாழ்ப்பாணம் வநதாாகள் என்பது குறிபபிடததக்கது.

## யாழ். இந்துவின் புதிய அதிபர்



**திரு. ஏ. பஞ்சலிங்கம்**

யாழ் இந்துக் கலூரியின் அதிபர் பதவியை இன்று பொறுப்பேற்கும் திரு. ஏ. பஞ்சலிங்கம் சிறிலங்கா கல்வி நிர்வாகச் சேவை தரம்-3 றைச் சேர்ந்தவர் விஞ்ஞானப் பட்டதாரியான இவர். கல்வியியலில் டிப்ளோமா பெற்றவர் புதுடில்லி தேசிய திட்டமிடல் நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் பயின்று கல்வி திட்டமிடல், நிர்வாகத்தில் சர்வதேச டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

1985-ல் கல்வி அமைச்சு இவரைப் பாடசாலை முகாமைத்துவ ஆலோசகராக நியமித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்து யாழ். இந்துக்கல்லூரிக்கு பஞ்சலிங்கம் மாற்றலாகியுள்ளார். இவரின் இடத்துக்கு உப அதிபர் திரு. ஆர் மகேந்திரன் நியமனம் பெற்றுள்ளார்.

**ஏழுதமிழ்**

களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய போரதீவு, வெல்லாவெளி ஆகிய முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரும் ரெலோக்குழுவினரும் இணைந்து பழுகாமப் பகுதியைச் சுற்றி வளைத்தனர்.

இச்சுற்றிவளைப்பின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் சாமித்தம்பி வண்ணன் (வயது 17, பா டிருப்பு) நான்கு பிள்ளைகளின் தந்தையான பழனித்தம்பி குணரத்தினம் (வயது 30. பழுகாமம்), இரண்டு பிள்ளைகளின்தந்தையான பழனித்தம்பி சந்திரப் பிள்ளை (வயது 28, பழுகாமம்) கந்தப்பன் உருத்திரமூர்த்தி (வயது 25, பழுகாமம்), சபாரத்தினம் திருநாவுக்கரசு (வயது 20, பழுகாமம்), சிவராசா புஸ்பராசா (மாணவன், வயது 14, பழுகாமம்) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

**வீரவணக்கம்**

டை, மண்டூர் ) குணசீலன் கா. கணேசமூர்த்தி, கோவில் போரதீவு) ராம்குமார் (புவனநாதன், மகிழடித்தீவு) விக்கினேஸ் (புல்லுமலை) ஆகிய நான்கு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகிழடித்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் பரமானந்தன் (க. மனோகரன் பழுகாமம் ) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

### ஆனையிறயில் ஒருவர்

இதேதினம் ஆனையிறவு இராணுவத்தினருடனான மோதலில் ஆனந்தன் ( பத்மநாதன் கமலநாதன் பூநகரி) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

### ஓமந்தையில் ஒருவர்

இதேவேளை நேற்றுமுன் தினம் ஓமந்தை முதலாம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத் தாக்குதலால் வல்லவன் (வைரவப் பெருமாள் பாலசிங்கம் ஓமந்தை) என்பவர் வீரமடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**திருமலையில்**

குரங்குப் பாலம் இராணுவ முகாம் பாலம் போட்டாறு, வேப்பங்குளம், பத்தாம் கட்டை, பன்மதவாச்சி ஆகிய முகாம்களில் இருந்து சுமார் 300க்கும்மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி பல பிரிவுகளாகப் பிரிந்து காட்டுக்குள்ளால் செல்லும் போது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் காலை 11-30 மணியில் இருந்து தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து

- ★ ஏ. கே. எல் எம். ஜி -01 ரம் மகசின்-01
- ★ ரி -56 1 ரகத்துப்பாக்கி-1 மகசின்-05
- ★ ரி. 56 II ரகத்துப்பாக்கி 1
- ★ ரி. -81 ரகத் துப்பாக்கி-1 மகசின் - 02
- ★ ஐ எம் ரவைகள்-640

ஆகிய ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

**யாழ் குடா**

வண்ணம் இருந்தனர் எழுச்சி கோஷங்களைத் தாங்கிய பதாகைகளுடன் கோஷங்களை எழுப்பிய சனசமுத்திரம் இதனைத் தொடர்ந்துதிரண்டு வந்தது

தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் படிநிலைகளை சித்தரிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், எதிர் காலத் தமிழீழம் அமையப் போகும் நிலையில் அதன் அபிவிருத்தித் திட்டங்களும், வளர்ச்சியின் சின்னங்களும் இந்த ஊாதிகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அதேவேளை 1-30 மணிக்கு பேரணி நல்லூர் கந்தசுவாமி கோயிலை வந்தடைந்ததைத் தொடர்ந்து வீதியில் மக்கள் நெருக்கடி அதிகரித்ததினால் கூட்டம் உடன் ஆரம்பமாகியது. கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பல்லயிரக் கணக்கான மக்கள் நல்லூர் கோயில் வீதியில் அமர்ந்து கூட்டத்தில் பங்கேற்றனர்

கூட்டம் மூன்றுமணியளவில் முடிவுற்றது. இருந்தும் கூட்டம் முடிவடைந்த பின்னரும் மருதனாமடத்தில இருந்து பேரணியாகப் புறப்பட்ட மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள்.

**இருநாள்**

படுகாயமடைந்தனர். இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் ஓமந்தை முதலாம் கட்டைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டவிமானத் தாக்குதலில் பொதுமகனொருவர் பலியானதுடன், மூவர் படுகாயமடைந்துள்ளனர்,


நேற்றுக்காலை 7.40 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கோழியகுளம், சொந்தக்காரன் குளம் ஆகிய இருபகுதிகளில் நான்கு குண்டுகளை வீசின. கோழியகுளம் பகுதியில் வீசப்பட்ட இரு குண்டுகள் தர்மலிங்கம் என்பவரின் வீட்டில் வீழ்ந்து வெடித்ததில் வீடு முற்றாகச் சேதமடைந்தது. இரண்டுகுண்டுகள் ஓமந்தையில் வீழ்ந்தன

மீண்டும் பிற்பகல் 1.30 மணியளவில் கோழியகுளம் பகுதியை வட்டமிட்ட இரு குண்டுவீச்சுவிமானங்கள் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் இப்பகுதியிலுள்ள அமுதன் என்பவரின்வீடு சேதமடைந்தது.

**புலிகளே**

தமிழர்ஆசிரியர்சங்கப்பொதுச் செயலாளர் திரு மகாசிவம்; மேதினப் பொதுக்கூட்டத்தில் மேலும் உரையாற்றுகையில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும், ஆயுதம் தாங்கிய போராட்டப்பாதை தவிர்க்க முடியாத தேவைஎன்பதையும் வலியுறுத்தினார். அத்துடன் இலவசக்கல்வி, இலவசப்புத்தகம் என்று சொல்லிக்கொண்டு சிறிலங்கா அரசு இனவாதப் போதனை செய்தது என்றார்

# மேதின கூட்டத்தில் மக்கள்



(2 ஆம்பக்கத் தொடர்ச்சி)

சமாதானம் நிலவுகிறது என தோற்றப்பாடு காட்டப்பட்டு பெறப்படும் இப்பணம் நாளை தமிழர்களின் இன அழிவுக்காக பயன்படும். இதில் எமக்கு சந்தேகமில்லை. இதனை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதே நேரம் புலிகள் இயக்கம் பலம் பொருந்திய நிலையிலிருந்து பேச்சுகளை நடத்துவதும் தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை தேடுவதும் விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் என நாம் கருதுகின்றோம்.

அன்பான தமிழீழ மக்களே! இன்று தமிழீழத்தின் தென் முனையைச் சேர்ந்தவர்கள் தமது தொழில், வாழ்வு, சொத்து சுகம் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கிறார்கள் அவர்களும் ஒரு கிராமத்தில் தனி நிலத்தில் வாழ்ந்தவர்கள். தனித்துவமாகவும் கௌரவத்தோடும் வாழ்ந்தவர்கள் இன்று காடுகளிலும், முகாம்களிலும் அகதிகளாக வாழ்கிறார்கள். இது தென் தமிழீழத்தவர்களுக்கு மட்டும் விதிக்கப்பட்ட வாழ்வல்ல. தமிழீழ தேசத்தின் ஒட்டுமொத்த நிகழ்ச்சி. தமிழீழமெங்கும் தமிழர்கள்வர்க்க வேறுபாடற்று அழிக்கப்பட்டார்கள் - அழிக்கப்படுகிறார்கள். தமிழீழ தேசத்தில் தொழிலாளர்களின் வாழ்வோ மக்களின் வாழ்வோ இந்த மண்ணின் விடுதலையின் பின்பு தான் சாத்தியமாகலாம். இது இந்த மண்ணின் நீண்ட போராட்ட வரலாறு கற்றுத் தந்த பாடம்.

தமிழீழ தேசத்திற்கு இன்று தேவையெல்லாம் விடுதலையும், சுதந்திரமும் தான். மரணத்தின் வாசலில் நின்று கொண்டு மரணம் எப்போதும் வரலாம் என்பதை ஏற்றுக் கொண்டு போராடும் தமிழீழ இளைஞர்களே, இன்றுதமிழீழ அன்னைக்குத் தேவைப்படுகிறது. இழப்புகளும், துன்பங்களும் தான் விடுதலைப் போராட்டத்தின் நியதி தமிழீழ தேசத்தில் நடக்கும் நியாயமான - தருமத்துக்கான போராட்டம் ஒருநாள் வெற்றி பெறும். வர்க்க வேறுபாடற்ற, சமத்துவமான சமூக அமைப்பையுடைய தமிழீழ தேசம் தோற்றம்பெறும் புலிகள் வரலாறு படைப்பார்கள். வீரமும் விடுதலையுணாவும் உலகம் வியக்கும் தியாக வாழ்வும் உலகின் வரலாற்றில் தமிழர்களை உயர்வாகப் பொறிக்கும் எனவும் தெரிவித்தார்.

**எமது மக்களின்**

யில்: உழைத்தவன் உரிமை கேட்டுப் போராடிய இந்த மே நாளில் எமது மக்களின் குரல் உலகின் மனச்சாட்சிக்கு எட்டட்டும். இங்கு நானொரு பகிரங்க பிரகடனம் செய்ய விழைகிறேன்.

சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பா, சீனா, அல்பேனியா போன்ற நாடுகளில் இடம்பெறும் மாற்றங்களை இங்குள்ள முற்போக்காளர்களும், எழுத்தாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். தமது சிந்தனையை மாற்றி இந்தப் போராட்டத்தை ஆதரிக்கவும், செழுமைப் படுத்தவும் முன்வரவேண்டும்.

இன்றைய மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை - புதிய கருத்துகளை ஜீரணித்துக்கொள்ள மறுப்பதே தற்கொலையும், மனநோயும் எமது மக்களிடையே அதிகரிக்க காரணமாகிறது சிறுவர்முதல் முதியோர் வரை அனைவரையும் ஆட்டிப் படைக்கும் மரணபயத்தை வென்றவர்களாக- அஞ்சாதவர்களாக இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் முன்னெடுக்குத போராட்டத்திற்கு ஆதரவளித்துச் செழுமைப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும் என்பதே எனது பகிரங்கப்பிரகடனம் ஆகும் எனக் குறிப்பிட்டார். திரு. பாலகுமாரன்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது